தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, வைகாசி 2

2012 மே 15, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு"

ஆட்சி முறையில் அறம் தவறாமல், அறம் இல்லாத தீய செயல்களைத் தவிர்த்து, வீரத்தில் குறைவுபடாது, மானத்தைப் பெரிதும் மதித்துப் போற்றும் திறமை கொண்டதே சிறந்த அரசாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 263, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

263—

குழந்தைகள் மையம்

***11731—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கே. ரெட்டிப்பாளையத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்

திட்டத்தின் மூலமாக குழந்தைகள் மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ரெட்டிப்பாளையத்தில் குறு அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருவதால், புதிய குழந்தைகள் மையம் துவக்கிட தற்போது தேவை ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உடுமலை வட்டத்திலுள்ள ரெட்டிப்பாளையம் பகுதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையமானது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அங்கன்வாடி மையங்களிலே பல்வேறு இடங்களிலே குடிநீர் வசதி இல்லாமல் உள்ளது; சில இடங்களிலே கழிப்பிட வசதி இல்லாமல் இருக்கிறது; அதேபோல சில அங்கன்வாடி மையங்களிலே மின்னிணைப்பு கொடுக்கப்படாமல் உள்ளது. அங்கு மின் இணைப்பு கொடுத்தால் அந்தக் குழந்தைகளுக்கு சௌகரியமாக இருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு T.V. எல்லாம் கொடுத்துள்ளார்கள். அவர்கள் அதைப் பயன்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். ஊராட்சியின் மூலமாக அதற்குரிய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கன்வாடி மையங்களில் குடிநீர் வசதி இல்லை என்று சொன்னார்கள். அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவரிடத்திலேயே*

2012 மே 15]

அந்தப் புகாரைத் தெரிவிக்கும்பொழுது, அதற்கான குடிநீர் வசதி சரிசெய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு பெறும்பொழுதே, அங்கன்வாடி மையங்களைப் பராமரிப்பதற்காக-- பெரிய அங்கன்வாடி மையம், குறு அங்கன்வாடி மையங்களைப் பழுது நீக்கம் செய்வதற்கு 47 கோடியே 61 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மின்சார வசதியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மின்சார வசதி செய்து தரப்படுவதற்கு, 45 ஆயிரத்து 345 மையங்களுக்கு ரூபாய் 27 கோடியே 21 இலட்சத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதேபோல, கழிப்பிட வசதியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். குழந்தைகள் கழிப்பிடம் கட்டுவதற்காக 29 ஆயிரத்து 729 மையங்களைத் தேர்வு செய்து ரூபாய் 23 கோடியே 78 இலட்சத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். இந்த ஒதுக்கீடெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயே எந்தெந்தப் பகுதி என்பதற்குக் கருத்துரு பெற்று, படிப்படியாகச் சரி செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கத்தைக் கொடுத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி, இந்த ஆண்டே செய்ய உள்ளதாகக் கூறினார்கள். என்னுடைய மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலே செட்டில்மென்ட் பகுதி இருக்கிறது. அந்த செட்டில்மென்ட் பகுதியிலே அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. அங்கே போய் பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு, உதவியாளர்களுக்குத் தங்கி இருப்பதற்கு வசதிகளை ஏற்படுத்தித் தரக்கூடிய வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் மூலமாக அதற்குரிய நடவடிக்கையை எடுத்துத் தருவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவியாளர்கள், பணியாளர்கள், சமையலர்கள் ஆகியோரைத் தேர்வு செய்யும்போதே, 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளே இருப்பவர்களைத்தான் தேர்வு செய்ய வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருக்கின்றது. அந்த ஆணையின்படி, அந்தந்தப் பகுதியிலே இருப்பவர்கள் காலையிலே வந்து அந்த உதவியாளர் பணியைச் செய்துவிட்டு மாலையிலேயே திரும்புவதற்கு வசதியாகத்தான், அதுவும் பெண்களின் பிரச்சினையிலே அதிகமாக கவனத்தை எடுத்துக்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த உத்தரவைத் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

264—

கட்டட வசதி

***5799—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியிலுள்ள சார்-பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு வட்டம், போச்சம்பள்ளி சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிதாக